**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 54/2023**
**Prosecution Witness**:1

| Name | **கஜேந்திரன்** (PW1) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of January 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது பச்சாகவுண்டன் வலசில் குடியிருந்து கொண்டு முத்தூட் நிதிநிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன தனலட்சுமி எனது அம்மா. கடந்த 22.05.2023ம் தேதி எனது அம்மா எங்கள் வீட்டில் இருந்து மேகரையான் தோட்டம், வெண்டிக்காரன் பாளையம் உள்ள எங்கள் தோட்டத்திற்கு எனது தந்தைக்கு சொந்தமான TN 33 BX 1569 என்ற எண்ணுள்ள XL இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது மாலை 04.15 மணி சுமாருக்கு வெண்டிக்காரன் பாளையம், முத்தூர் - ஈரோடு ரோட்டில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்றுகொண்டிருந்ததாகவும், வெண்டிக்காரன் பிரிவில் திரும்பி கிழக்கு நோக்கி சென்று சாலையை பாதி கடந்த நிலையில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்த TN 39 R 3555 என்ற எண்ணுள்ள ஆம்னி வேன் அதிவேகமாகவும், அலட்சியமாகவும் வந்து எனது அம்மா வண்டியில் மோதிவிட்டதாகவும், எனது அம்மாவிற்கு பின் தலையில் காயம் ஏற்பட்டு விட்டதாகவும், சம்பவத்தை நேரில் பார்த்த கார்த்திகேயன், ஆறுமுகம் ஆகிய இருவரும் எனது அம்மாவை ஆம்புலன்ஸ் மூலம் கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், எனது அம்மாவை பரிசோதித்ததில் எனது அம்மா இறந்துவிட்டதாகவும், மாலை 05.50 மணி சுமாருக்கு பழனியில் இருந்த எனக்கு கார்த்திகேயன் என்பவர் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். தகவல் கேள்விப்பட்ட நான் கொடுமுடி அரசு மருத்துவனைக்கு வந்து எனது அம்மாவை பார்த்தேன். எனது அம்மாவின் மீது மோதிய ஆம்னி வேனை ஓட்டி வந்த ஓட்டுநர் பெயர் முத்தூர் ரங்கப்பன் காடு அருகில் உள்ள சக்திவேல் என்று விசாரித்து தெரிந்துகொண்டேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது எனது அம்மா விபத்தில் அடிபட்டது சம்பந்தமாக சிவகிரி காவல்நிலையத்தில் நான் அளித்த புகார் ஆகும். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.12 16:25:39 +0530

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

எனது அம்மா இறந்தது சம்பந்தமாக நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக நான் கேள்விப்பட்ட போது நான் எங்கு இருந்தேன் என்றால் பழனியில் இருந்தேன். அது சம்பவ இடத்திலிருந்து சுமார் 100 கிலோ மீட்டர் தூரம் என்றால் சரிதான். எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது அம்மாவிற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்தில் சிக்கிய எங்களது இருசக்கர வாகனத்திற்கு வாகன உரிமம் மற்றும் இன்சூரன்ஸ் இல்லை என்றால் இன்சூரன்ஸ் மட்டும் இல்லை ஆனால் வாகனத்திற்கான உரிமம் இருந்தது. RTO அலுவலகத்தில்மேற்படி ஆவணங்களை நான் தாக்கல் செய்தேன் என்றால் தாக்கல் செய்தேன். எனது அம்மாவிற்கு சுமார் 59 வயது இருக்கும். சம்பவமானது ரோட்டை குறுக்கே கடக்கும் பொழுது தான் ஏற்பட்டது என கேள்விப்பட்டேனா என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு வந்தேன் என்றால் சுமார் 07.00 மணிக்கு முன்பாக வந்துவிட்டேன்.

2. நான் கொடுமுடி மருத்துவமனைக்கு வரும்பொழுது சிவகிரி போலீசார் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு வரும் பொழுது ஆறுமுகம் மற்றும் கார்த்திகேயன் ஏற்கனவே அங்கு இருந்தார்கள் மேற்படி நபர்கள் எனக்கு என்ன உறவு என்றால் கார்த்திகேயன் எனது அண்ணன் ஆவார், ஆறுமுகம் பக்கத்து தோட்டக்காரர் ஆவார். மேற்படி மருத்துவமனையில் சிவகிரி போலீசார் கார்த்திகேயன் மற்றும் ஆறுமுகம் ஆகியோரை விசாரித்து எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் யார் யார் கையொப்பம் செய்தோம் என்றால் நானும் எனது அண்ணன் கார்த்திகேயனும் கையொப்பம் செய்தோம். அதற்கு பின்னால் சுமார் 7:30 மணிக்கு சிவகிரி காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். சிவகிரி காவல் நிலையத்திற்கு நானும் கார்த்திகேயன், ஆறுமுகம் சேர்ந்துதான் சென்றோம் என்றால் சரிதான்.

3. சிவகிரி காவல் நிலையத்தில் யார் சொல்ல சொல்ல புகார் எழுதினேன் என்றால் உதவி ஆய்வாளரும் தலைமை காவலரும் இருவரும் சொல்ல சொல்ல எழுதினேன் அப்போது கார்த்திகேயன் ஆறுமுகமும் உடன் இருந்தார்கள் என்றால் சரிதான். புகாரில் நானும் கார்த்திகேயனும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல நான் மட்டும் தான் கையொப்பம் செய்தேன். மேற்படி புகாரில் ஆறுமுகம் சாட்சி கையொப்பம் போட்டாரா என்றால் இல்லை. எங்கள் மூன்று பேரை தவிர ஊர்காரர்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 5,6 பேர் இருந்தார்கள். சாட்சி ஜெகநாதன், பழனிச்சாமி ஆகியோர் காவல் நிலையம் வந்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சி ஜெகநாதன் மற்றும் பழனிச்சாமி ஆகியோரிடம் காவல் நிலையத்தில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.01.12 16:25:46 +0530

4. அப்போதே காவல் நிலையத்தில் வைத்து என்னை யார் விசாரித்தார்கள் என்றால் உதவி ஆய்வாளரும் தலைமை காவலரும் விசாரித்தார்கள் மறுநாள் பிரேத விசாரணை செய்யும் போதும் என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரிக்கும் பொழுது நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சரிதான். நான் நஷ்ட ஈட்டு வழக்கில் அதிக நஷ்ட ஈடு கிடைக்க வேண்டி பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.01.12 16:25:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 54/2023**
**Prosecution Witness**:2

| | | | |
|---|---|---|---|
| Name | ஆறுமுகம் (PW2) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of January 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது வெடிக்காரம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு தேங்காய் உறிக்கும் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கஜேந்திரனை தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு மாதம் ஞாபகம் இல்லை, 22ம் தேதி அன்று மாலை 04.00 சுமாருக்கு வெடிக்காரம்பாளையத்தில் உள்ள விவசாய காட்டில் நான் இருந்தபோது ஒரு பெண்மணி TVS இருசக்கர வாகனத்தில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்து வெடிக்காரம்பாளையம் பிரிவில் கிழக்கு நோக்கி திரும்பிய போது தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்த ஆம்னி வேன் இருசக்கர வாகனத்தில் திரும்பி கொண்டிருந்த பெண்மணியின் மீது மோதி சத்தம் கேட்டு காட்டில் இருந்த நான் சென்று பார்த்தேன். நான் சென்று பார்த்தபோது அந்த பெண்மணி மயங்கியநிலையில் இருந்தார். அவருக்கு இரத்தம் வந்து கொண்டிருந்தது. அவரை சாலையின் ஓரமாக தூக்கி வைத்தோம். 108 ஆம்புலன்ஸ் மூலம் அந்த பெண்மணியை கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு நானும் கார்த்தி என்பவரும் கொண்டு வந்து சிகிச்சையில் சேர்ந்தோம். அந்த பெண்மணி இறந்துவிட்டார். அவரது உடலை சவக்கிடங்கில் வைத்துவிட்டார்கள். அந்த ஆம்னிவேனை ஓட்டிவந்தவர் பெயர் சக்திவேல் என்றும், அவர் முத்தூருக்கு அருகில் உள்ளவர் என்றும் தெரியும். ஆஜர் எதிரி தான் விபத்தின் போது ஆம்னி வேனை ஓட்டிவந்தவர். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

இறந்து போனவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவு முறை இல்லை பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். நான் தோட்டத்திற்கு தண்ணீர் காட்டிக் கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அப்போது திடீரென சத்தம் கேட்டு சென்று பார்த்தேன் என்றால் சரிதான். அப்போது மேற்படி வழக்கில் இறந்து போனவர் அடிபட்டு கீழே கிடந்தார் என்றால் சரிதான். சுயநினைவு இருந்ததா என்றால் இல்லை. அப்போது அக்கம் பக்கத்தில் இருந்தவர்களிடம் நான் விபத்து சம்பந்தமாக கேட்டு தெரிந்து கொண்டேனா என்று தெரிந்து கொண்டேன். அப்போதே போலீசார் அங்கு வந்தார்கள்

என்றால் சரிதான். மேற்படி போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான் மேற்படி போலீசார் புகைப்படம் எடுக்கும் பொழுது விபத்தில் சிக்கிய வாகனம் எல்லாம் அங்கு கிடந்தது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இரத்தக்கரை மற்றும் வண்டியின் உதிரி பாகங்கள் இருந்தது என்றால் சரிதான். போலீசார் தான் ஆம்புலன்ஸ் மூலமாக விபத்தில் அடிபட்ட வரை அனுப்பி வைத்தார்கள் என்றாலும் நான் நேரடியாக மருத்துவமனைக்கு சென்றேன் என்றாலும் சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்ற பொழுது விபத்தில் சிக்கியவர் இறந்து விட்டதால் அவரது மகன் கஜேந்திரனிடம் சொல்லிவிட்டு நான் வீட்டுக்கு சென்று விட்டேன் என்றால் சரிதான். நான் விபத்தில் இறந்தவர் எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் முதல் விசாரணையில் தவறான சங்கதிகளை கூறி உள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.12 16:26:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 54/2023**
**Prosecution Witness**:3

| Name | கார்த்திகேயன் (PW3) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of January 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது பச்சாகவுண்டன் வலசில் குடியிருந்து கொண்டு விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கஜேந்திரனை தெரியும். கடந்த 22.05.2023ம் தேதி மாலை 04.15 மணி சுமாருக்கு நான் வெடிக்காரன்பாளையம் பிரிவில் நின்று கொண்டிருந்தபோது தனலட்சுமி என்பவர் XL இருசக்கர வாகனத்தில் முத்தூரில் இருந்து ஈரோடு செல்லும் சாலையில் வந்து விவசாய காட்டிற்கு செல்லும்போது முத்தூர் சாலையில் இருந்து ஈரோடு நோக்கி சென்ற ஆம்னி வேன் தனலட்சுமி சென்ற XL இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டது. மோதியதில் தனலட்சுமி சுமார் 50 அடி தூரம் தள்ளி தூக்கி எறியப்பட்டார். அங்கு நின்று பேசிகொண்டிருந்த நானும் ஆறுமுகம் என்பவரும் சென்று பார்த்தபோது தனலட்சுமிக்கு தலையின் பின்பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தது, அவர் மயங்கிய நிலையில் இருந்தார். அவரை தூக்கி சாலையின் ஓரமாக வைத்து விட்டு ஆறுமுகம் தண்ணீர் கொடுத்து முதலுதவி செய்தார். தனலட்சுமி தண்ணீரை குடிக்கவில்லை. பிறகு நான் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து தனலட்சுமியை கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டாதாக சொன்னார்கள். ஆம்னிவேனின் பதிவு எண் 555. அந்த ஆம்னிவேனை ஓட்டிவந்தவர் ஆஜர் எதிரி சக்திவேல் தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கும் பொழுது விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண்ணை கூறினேன் என்றால் கூறினேன். தற்போது என்னால்அந்த ஆம்னி வேனில் பதிவு எண்ணை கூற இயலுமா என்றால் 555 என்று மட்டும் ஞாபகம் உள்ளது மற்றது ஞாபகம் இல்லை. சம்பவம்

நடைபெற்ற போது ஆறுமுகம் என்ன செய்து கொண்டிருந்தார் என்றால் தண்ணீர் பாய்த்து கொண்டிருந்தார். சத்தம் கேட்டு விபத்தில் சிக்கிய தனலட்சுமியை பார்க்க சென்று விட்டு பின்பு தான் தண்ணீர் எடுத்துச் சென்றோம் என்றால் சரிதான் விபத்து நடந்த இடத்தில் ரத்த கரை மற்றும் வாகனத்தின் உடைந்த உதிரி பாகங்கள் கிடந்தது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றவுடன் போலீசார் அங்கு வந்து விட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாதுதனியார் ஆம்புலன்ஸ் மூலமாக நாங்கள் தான் விபத்தில் அடிபட்ட வரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரிதான். போலீசார் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரிதான் கொடுமுடி மருத்துவமனைக்கு யார் யார் வந்தோம் என்றால் நானும் சாட்சி ஆறுமுகமும் வந்தோம். கொடுமுடி மருத்துவமனைக்கு வந்த பொழுது போலீசார் மருத்துவமனையில் இல்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்தவரின் மகன் மருத்துவமனைக்கு வந்துவிட்டு மீண்டும் செல்லும் வரை அங்கு போலீசார் வரவில்லை என்றால் சரியல்ல போலீசார் வந்து விட்டார்கள்நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல இறந்து போனவர் எனக்கு சித்தி முறை என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.01.12 16:26:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 54/2023**
**Prosecution Witness**:4

| | | | |
|---|---|---|---|
| Name | ஜெகநாதன் (PW4) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of January 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது பச்சாகவுண்டன் வலசில் குடியிருந்து கொண்டு விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 23.05.2023ம் தேதியன்று காலை 06.30 மணி சுமாருக்கு ஈரோடு – முத்தூர் சாலையில், வாய்க்கால்மேடு போகும் சாலையில் போலீசார் தனலட்சுமி என்பவர் இருசக்கர வாகனத்தில் தனது விவசாய நிலத்திற்கு சென்று கொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் வந்த ஆம்னி வேன் மோதிய விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணைக்காக அழைத்தார்கள். போலீசார் வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் விபத்தை நீங்கள் பார்த்தீர்களா என்று கேட்டார்கள். ஆம்னிவேன் வேகமாக வந்து மோதி தனலட்சுமி தூக்கி எறியபட்டதை நான் பார்த்தேன் என்று போலீசாரிடம் கூறினேன். போலீசார் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் செய்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னுடன் பழனிசாமி என்பவர் கையொப்பம் செய்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

அ.சா.1 எனக்கு உள்ளூர்காரர், பழக்கம் ஆவார். போலீசார் வரைபடம் தயார் செய்யும் பொழுது புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் இருந்த இரத்தக்கரை மற்றும் வாகனத்தின் உதிரிபாகங்களை போலீசார் குறித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி தினத்தில் போலீசார் என்னை எங்கு வைத்து கூப்பிட்டார்கள் என்றால் நான் சம்பவ இடத்திற்கு வந்த பொழுது என்னை நிறுத்தி விசாரித்தார்கள். அதற்கு முன்பாக நான் இந்த வழக்கு சம்பந்தமாக போலீசாரை நான் சென்று பார்க்கவில்லை என்றாலும் எங்கும் போகவில்லை என்றாலும் சரிதான். நான் போலீசாரிடம் சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறவில்லை என்றால் சரிதான். எனக்கு சம்பவத்தை பற்றி நேரிடையாக தெரியாது என்றாலும் சரிதான். நான் அ.சா.1 கேட்டுக் கொண்டதன் பேரில் காவல் நிலையத்தில் வைத்து

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.12 16:26:17 +0530

கையொப்பம் செய்துவிட்டு வழக்குக்காக தற்போது சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.01.12 16:26:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 54/2023**
**Prosecution Witness**:5

| Name | பழனிசாமி (PW5) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of January 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது பச்சாகவுண்டன் வலசில் குடியிருந்து கொண்டு விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 23.05.2023ம் தேதியன்று காலை 08.00 மணி சுமாருக்கு ஈரோடு - முத்தூர் சாலையில், வெடிக்காரம்பாளையத்தில் சாலை விபத்து சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

விபத்தில் இறந்து போன தனலட்சுமி உள்ளூர்க்காரர் என்றால் சரிதான். முதல் விசாரணையில் நான் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கு முன்பாகவோ அல்லது பின்பாகவோ இந்த வழக்கு சம்பந்தமாக நான் எங்கும் செல்லவில்லை என்றால் என்றாலும் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றாலும் சரிதான். அ.சா.1 கேட்டுக்கொண்டதன் பேரில் காவல் நிலையத்தில் வைத்து நான் கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.01.12 16:26:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.